8th September 1970]

Pensions

*80. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(*a*) whether the teachers, who have retired from the Government Kallar Reclamation Schools in the Madurai District, are denied pensions; and

(*b*) if so, the reasons therefor ?

ஓய்வூதியங்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரை மாவட்டத்தில் உள்ள கள்ளர் சீர்திருத்தப் பள்ளி களிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியங்கள் மறுக்கப்படு கின்றனவா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இது எழவில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : மதுரை மாவட்டத்தில் உள்ள இந்தக் கள்ளர் சீர்திருத்தப் பள்ளியிலுள்ள சில ஆசிரியர்களுக்கு ''கிராஜியுடி'' என்ற வகையில் ரூ. 400 அல்லது ரூ. 500 என்று மொத்தமாகக் கொடுத்துவிட்டு, அவர்கள் பென்ஷனுக்கு அருகதையற்றவர்கள் என்று சொல்லப்படுவதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. ''கிராஜியுடி'' வேண்டாம், அதற்குப் பதிலாக ஓய்வு ஊதியம் வேண்டுமென்று அவர் கள் கேட்கிறார்கள். ஆனல் அவர்களுக்கு அதைத் தர முடியாது என்றும் கிராஜியுடியைத்தான் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கட் டாயப்படுத்தப்படுவதாகவும் அரசாங்கத்திற்கு ஏதேனும் புகார் வந் திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதுபோன்ற குறைபாடுகள் அரசாங்கத்திற்கு இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை. அப்படி ஏதாவது குறிப்பிட்ட ஒரு பிரச்னை இருந்து, அதைத் தெரிவித்தால், அதற்கு ஆவன செய்யலாம்.

திரு. எம். ராஜா அய்யர் : அந்த ஆசிரியர்கள் ''கிராஜியுடி'' வேண்டாமென்னும்போது, அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு அவர் களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்க யோசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதைப் பரிசீலனை செய்து பிறகு தக்க முடிவு எடுக்கலாம்.